இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 304 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 31 – சனிக்கிழமை 14 ஜூன் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 304 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 31 - Saturday 14 June 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## கீழடி அகழாய்வு : தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து

# மதுரையில் ஜூன் 18ஆம் தேதி ஆர்ப்பாட்டம்!

## தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெறுகிறது!

**சென்னை, ஜூன் 14-**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, 'அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் ஜூன் 18ஆம் தேதி "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை" யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.**

கீழடி ஆய்வை மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம் தெரிவித்து 1.6.2025 அன்று மதுரையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்குழுவில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெளியிட்டும்கூட, அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்து கூட தெரிவிக்கவில்லை.

இந்தப் பொதுக்குழு நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள் கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாக வும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல் துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது.

தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருத-சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடி ஆய்வுகள் உண்மைத்தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளிவந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

கீழடி தமிழரின் தாய்மடி! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாக எங்களது தொன்மையை நிறுவுகிறோம். இதில் ஆணவ - ஆதிக்க அரசியல் செய்ய நினைத்தால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை இப்பொதுக்குழு எச்சரிக்கிறது!

இவ்வாறு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து, பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வருகிற 18ஆம் தேதி புதனன்று தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி;

கீழடி என்கிற பெயரே பா.ஜ.க அரசுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. கீழடி ஆய்வை மேற்கொள்ளவே நீதிமன்றத்தை நாடவேண்டியிருந்தது. அகழாய்வை மேற்கொண்ட அதிகாரிகள் பா.ஜ.கவின் குரலாக ஒலிக்கவில்லை என்பதற்காக அவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள்.

கடந்தகால அடிமை எடப்பாடி அரசும் பா.ஜ.கவினரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு கீழடி அகழாய்வைக் கிடப்பில் போட்டது. தமிழ்நாட்டில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்ததும் கீழடி அகழாய்வுக்குப் புத்துயிர் கொடுத்ததோடு துரிதமாக பல கட்ட ஆய்வுகள் நடத்தி அருங்காட்சியகத்தையும் கட்டியெழுப்பினார்.

அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து வருகிற ஜூன் 18ஆம் தேதி காலை 10 மணிக்கு தி.மு.க. மாணவர் அணி சார்பில், "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை" யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

### 'உடன்பிறப்பே வா' – கழகத் தலைவர் தொகுதி நிர்வாகிகளுடன் சந்திப்பு!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் முதல் கட்டமாக, சிதம்பரம், விழுப்புரம் மற்றும் உசிலம்பட்டி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். இந்த நிகழ்வின்போது, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி. கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின் ஆகியோர் உடனிருந்தனர்.

## குழந்தைகள் - பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள்

# தமிழ்நாட்டில் மிகவும் குறைவே!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன் 14-

தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் மிகவும் குறைவே என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் மிகவும் குறைவு என்ற தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளை சுட்டிக்காட்டி காவல்துறை தலைமை இயக்குநர்

சங்கர் ஜிவால் அவர்களின் நேர்காணல் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை பெருகி விட்டதாகப் பரப்பப்படும் அடிப்படையற்ற விஷமப் பிரசாரங்களுக்கு பதிலடி தரும் வகையில் அமைந்துள்ள தமிழ்நாடு DGP அவர்களின் நேர்காணலைப் பகிர்கிறேன்.**

**NCRB தரவுகளின்படி குழந்தைகள், பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் மிகவும் குறைவாக நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருக்கிறது.**

**அதேநேரம், POCSO குற்றங்களை எந்தவித அச்சமும் இல்லாமல், காவல் நிலையத்தில் நம்பிக்கையோடு புகாரளிக்கும் விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது.**

**அச்சமின்றிப் புகாரளித்தால்தான், குற்றவாளியை முதல் குற்றத்தின்போதே கைதுசெய்து தண்டனை பெற்றுத்தர முடியும். இத்தகைய நபர்கள் மேலும் குற்றங்களில் ஈடுபடாமல் தடுக்க இது மிக அவசியம்.**

**ஏற்கெனவே நான் கூறியது போல, குழந்தைகள் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் Zero Tolerance விரைவான விசாரணை அதிகபட்ச தண்டனை முன்விடுதலை இல்லை என்பதே நமது அரசின் policy!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## டெல்டா மாவட்ட பாசனத்திற்காக

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை கல்லணையை திறந்து வைக்கிறார்!

### தஞ்சையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

*தஞ்சாவூர், ஜூன் 14-*

*தஞ்சை மாவட்டத்தில் 15, 16 ஆகிய 2 நாட்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு, அரசு சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார்.*



*இந்த நிலையில் நேற்று தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அமையும் இடத்தில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் மண்டல பொறுப்பாளருமான கே.என்.நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.*

*சிலை அமையும் இடத்திற்கான மாதிரி வரைபடத்தை பார்த்தனர். சிலையைச் சுற்றிலும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து ஆலோசித்தனர். தொடர்ந்து செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கழகத்தினரிடமும் அமைச்சர் கே.என்.நேரு கேட்டறிந்தனர்.*

*பின்னர் அமைச்சர் கே.என்.நேரு பேட்டியில்.*

*தஞ்சைக்கு நாளையும், நாளை மறுதினமும் (15, 16 தேதிகளில்) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதற்காக அவர் 15ஆம் தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு மதியம் வருகிறார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் கல்லணை வருகிறார். அங்கு சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு மாலையில் மேட்டூர் அணையைத் தொடர்ந்து டெல்டா மாவட்ட பாசனத்திற்காக கல்லணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுகிறார், எனத் தெரிவித்தார்.*

## குஜராத் - அகமதாபாத்தில்

# விமான விபத்து நடந்த இடத்தில் - பிரதமர் மோடி நேரில் ஆய்வு!

*அகமதாபாத், ஜூன் 14-*

*குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான விபத்து நடந்த இடத்தை பிரதமர் மோடி நேரில் சென்று பார்வையிட்டார்.*

*குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து வெடித்து சிதறியது. உடைந்து நொறுங்கிய விமானத்தில் இருந்த 242 பேரில், 241 பேர் உயிரிழந்தனர். மருத்துவ மாணவர்கள் தங்கியிருந்த விடுதியின் மீது விழுந்ததில், அவர்களும் பாதிக்கப்பட்டனர். மாணவர்களில் 5 பேர் பலியாகினர். இந்தக் கோர விபத்து நடந்த இடத்துக்கு நேரில் சென்ற பிரதமர் மோடி, அங்கு ஆய்வு செய்தார். விமானம் தீப்பிடித்து எரிந்ததில் கரிபிடித்திருக்கும் கட்டடங்கள், அதில் தொங்கியபடி இருக்கும் விமானத்தின் பாகங்கள் ஆகியவற்றை பிரதமர் பார்வையிட்டார். மீட்புப் பணி, சிகிச்சையில் இருப்போரின் நிலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பிரதமர் மோடி கேட்டறிந்தார்.*

*விமான விபத்தில் காயங்களுடன் மீட்கப்பட்ட மருத்துவ மாணவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட 32 பேர் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளனர். அவர்களை நேரில் சென்று பார்வையிட்ட பிரதமர் மோடி ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் பிரதமர் கேட்டறிந்தார்.*

*குஜராத் விமான விபத்தில் பயணித்த 242 பேரில், ஒருவர் மட்டும் விமானத்தில் இருந்து குதித்து உயிர் பிழைத்தார். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.*

*இந்நிலையில், அகமதாபாத் பகுதியில் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட பிரதமர் மோடி, விமானத்தில் இருந்து குதித்து உயிர்தப்பிய இளைஞரைச் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்.*